**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No.338/2019**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.2**

**Defence**
**Court**

**Name** **:**அழகுபாண்டி

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16.08.2022

முதல் விசாரணை:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் நகர் தெற்கு காவல் நியைலத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்னர் தேனி மாவட்டம் வருச நாடு காவல் ி நயைலத்தில் சார்பு ஆய்வாளராக பணியில்

இருந்துபோது கடந்த 12.10.2018ம் தேதி காலை 6.00 மணிக்கு எனது ரகசிய தகவலாளி எனக்கு வருசநாடு சிங்கராஜபுரத்தில் இருநது பூசனூத்து செல்லும் ரோட்டில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் 9.00 மணிக்குள் கஞ்சா என்ற போதை பொருள் கொண்டுவருகிறார் என்று கூறிய ரகசிய தகவலை 6.10 மணியில் இருநது 6.15 மணிக்குள் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து ரகசிய தகவல் அறிக்கையை 6.20 மணிக்கு காவலர் ராஜா என்பவர் மூலம் காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். 6.35 மணிக்கு நிலையத்தில் இருநது புறப்பட்டு ரகசியதகவலாளியை என்னுடன் அழைத்து கொண்டு 6.40 மணிக்கு சம்பவ இடத்திற்கு ரகசிய தகவலாளி உடன் சென்றேன். ரகசிய தகவலாளியுடன் தகுந்த உபகரணங்களுடனும் சம்பவ இடத்திற்கு புறப்பட்டு பின்னர் காவலர்கள் ரஞ்சித் மற்றும் கார்த்திகேயன் இருவரையும் வரசொல்லி விட்டு நான் சென்றேன். என்னுடன் ரகசிய தகவலாளி வந்த விபரம் காவலர்களுக்கு தெரியாது. சம்பவ இடத்தில் தகவலாளி மறைந்துகொண்டு அந்த வழியாக வந்த நபரை அடையாளம் காட்டி ஒளிந்துகொண்டார். பின்னர் நாங்கள் மூவரும் அந்த வழியாக வந்த ஆண் நபர் ஒருவரை மறித்து விசாரித்தபோது அவர் தன் பெயர் உதயகுமார், த/பெ.ராசுதேவர், காந்திகிராமம் என்று கூறினார் அவரிடம் நான் வருசநாடு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்றும் என்னுடன் வந்தவர்கள் காவலர்கள் என்றும் அறிமுகம் செய்துகொண்டு அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற உரசாக்குபையை கஞ்சா என் ற போதை பொருள் இருப்பதாக கூறி அவரிடம் சோதனை செய்ய வேண்டும் என்று கூறினேன். அதற்கு முன்னர் நீங்கள் விரும்பினால் அருகில் உள்ள நீதிதுறை நடுவரிடமோ அல்லது அரசுபதிவிதழ் பெற்ற அதிகாரியிடமோ கொண்டுசென்று சோதனை இடலாம் என்று கூறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது அல்லது காவல் சீருடையில் உள்ள நான் சோதனை இடலாமா என்று கேட்டதற்கு அவர் என்னை வேறு

எங்கும் கொண்டுசெல்ல வேண்டாம் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் 6.45 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயாரித்து அதில் நான் கையொப்பம் இட்டேன். உதய குமாருக்கு கையொப்பம் செய்ய தெரியாததால் இடது கை பெருவிரல் ரேகை பெற்று அவருக்கு நகல் ஒன்றை சார்பு செய்தேன். பின்னர் அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற உரசாக்குபையை திறந்து பார்த்ததில் அதில் பசுமை கலந்த பழுப்பு நிறத்தில் இலை, பூ, தண்டுடன் பொருள் காணப்பட்டது அதில் ஒரு சிட்டிகை எடுத்து நெருப்பு வைத்து பார்க்க அது கஞ்சா மணம் வந்தது, அதைபற்றி அவரிடம் விசாரிக்க அவரும் கஞ்சாஎன ஒப்புக்கொண்டார். நாங்கள் கொண்டுவந்த தராசில் அதை எடைபோட்டு பார்க்க சுமார் வ 6 கிலோ கஞ்சாஇருந்தது. பகுப்பாய்வுக்காக அதில் இருநது சுமார் 50 கிராம் எடையுள்ள கஞ்சாவை எடுத்து காக்கி நிற பேப்பரில் மடித்து நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து விபர பட்டியல் தயார் செய்து அவரிடம் கைரேகை பெற்று நானும் கையொப்பம் போட்டு சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அதில் ஒட்டினேன். அதில் S1 என குறியீடு செய்தேன். மீதம் உள்ள 5 கிலோ 950 கிராம் கஞ்சாவை அந்த வெள்ளை நிற சாக்குபையில் நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து விபர பட்டியல் தயார் செய்து அவரிடம் கையொப்பம் பெற்று நானுட்ம சாட்சிகளும் கையொப்பம் இட்டு அதில் ஒட்டினேன். அதில் P1 என குறியீடு செய்தேன். பின்னர் 7.30 மணிக்கு அந்த கஞ்சாவை அத்தாட்சி தயார் செய்து அதில் கைப்பற்றினேன். பின்னர் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்வதன் காரணம் கூறி உதய குமாரை கைது செய்து கைது பற்றி உறவினர்களுக்கு தெரியபடுத்தி சட்ட சலுகைகளை எடுத்து கூறி அவரிடம்கைப்பற்றியய கஞ்சாவுடன் சேர்த்து அவரையும் 8.10 மணிக்கு நிலையம் கொண்டுவந்து அவரை திரேக பரிசோதனை செய்து

பாராவிடம் ஒப்படைத்தேன். பின்னர் அவர் மீது வருசநாடு காவல் நிலைய குற்ற எண் 257/2018, , ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலை ஆண்டிபட்டி கனம் நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார். நான் விரிவான அறிக்கை ஒன்றை ஆய்வாளருக்கு அனுப்பினேன். ரகசிய தகவல் அ.சா.ஆ.3 ஆகும். கைது நமூனா. அ.சா.ஆ. 4 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆகும். விரிவான அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகும். பகுப்பாய்வு சென்று திரும்பிய கஞ்சா சா.பொ.1, மீதம் உள்ள கஞ்சா சா.பொ.2 ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாகும். அந்த தகவலில் எதிரியின் பெயர் விலாசம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தகவல் கிடைத்தபோது ஆய்வாளர் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் இருந்தார். நான் எனக்கு கிடைத்த தகவலை தொலைபேசி மூலம் அவருக்கு தெரிவித்து காவலர் - 135- ராஜா மூலம் அனுப்பி வைத்தேன். எனக்கு கிடைத்த ரகசிய தகவலை பதிவு செய்து அந்த தகவலை நேரடியாக ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். தனி அறிக்கையாக அனுப்பவில்லை. ஆய்வாளர் எனக்கு தொலைபேசி மூலம் உத்தரவு கொடுத்தார். நான் இருசக்கர வானத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். என்னுடன் தகவலாளியையும் என்னுடைய இருசக்கர வானத்தில் அழைத்து சென்றேன். நான் காவல் நிலையம் விட்டு 6.35 மணிக்கு கிளம்பினேன். மற்ற காவலர்களுக்கு தகவல் தெரிவித்தபோது

அவர்கள் சிங்கராஜபுரத்தில் இருந்தார்கள். அங்கிருந்து சம்பவஇடத்திற்கு வந்தார்கள். சிங்கராஜபுரத்தில் இருநது பூசனூத்து செல்லும் சாலையில் வந்துகொண்டிருநதார். சிங்கராஜபுரம் ஊரில் இருந்து சுமார் 400 மீட்டா முதல் 500 மீட்டர் உள்ளாக அந்த இடம் உள்ளது. வருசநாட்டில் இருந்து வரும்போது சிங்க ராஜபுரம் ஊரை கடந்து தான் வரவேண்டும். நான் வரும் வழியில் தனிநபர் சாட்சிகள் எவரையும் சோதனைக்காக சாட்சியாக இருக்கும்படி அழைததுக்கொள்ளவில்லை. எதிரியை 6.40 மணிக்கு பார்த்தேன். நான் தான் சோதனை செய்தேன். 6.45 மணிக்கு பின்னர் அவரை சோதனை செய்தோம். சோதனை சம்மத கடிதம் தயார் செய்து கைரேகை பெற்ற பின்னர் தான் அவரை சோதனை செய்தேன். சோதனை சம்மத கடிதத்தில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எதிரியை அவர் உரிமை பற்றி விளக்கி சம்மதம் பெற்று தயாரிக்கப்பட்டது என்று குறிப்பாக எதுவும் இல்லை என்றால் சரிதான். சோதனை கடிதம் இரண்டு பாகங்களாக உள்ளது. முதல் பகுதியில் நகல் பெற்றுக்கொண்டதற்காக கையொப்பம் காணப்படுகிறது என்றால் சரிதான். 2 வது பகுதியில் எதிரிக்கு நகல் வழங்கப்பட்டதாக தனியே குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். முற்பகுதியில் மட்டும உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு அதில் உள்ள விபரங்களை படித்துக்காண்பித்தாகவும் அவர் புரிந்துகொண்டு கைரேகை செய்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். கைத்தராசில் அந்த பொருளை எடைபோட்டோம். 6 கிலோவையும் ஒரே முறை எடைபோட்டோம். நான் கூறுவது தவறு என்றும் கைத்தராசில் அவ்வாறு எடைபோட இயலாது என்றால சரியல்ல. அத்தாட்சி 7.30 மணிக்கு தயார் செய்தேன். அத்தாட்சியில் உள்ள விபரங்கள் அனைத்தும் என்னால் எழுதப்பட்டது. அத்தாட்சியில் காலம் -5 ல் 2 வது பகுதியில் உள்ள விபரங்கள் வேறுநபரால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அத்தாட்சியில் உள்ள விபரங்களை படித்து காண்பித்து கைரேகை வாங்கியதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

அத்தாட்சி நகல் எதிரிக்கு கொடுத்தேன். அந்த விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் கையொப்பம் இட்ட இடத்தில் தேதி குறிப்பிட வில்லை என்றால் சரிதான். எதிரியை 7.50 மணிக்கு கைதுசெய்தேன். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன். அதில் உள்ள விபரங்களை படிதத்து காண்பித்து கைரேகை வாங்கியதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். கைதுநமூனாவில் தேதி , நேரம் உள்ளது. அதில் எதிரியிடம் கைரேகை வாங்கி யுள்ளேன். நகல் ஒன்றை கொடுத்துள்ளேன். அதில் உள்ள விபரங்களை படித்து காண்பித்து கைரேகை வாங்கியதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 ல் உள்ள துண்டுதாள் சம்பவ இடத்தில் வைத்து ஒட்டப்பட்டது. அதில் குற்ற எண்ணை தவிர்த்த மற்ற விபரங்கள் சம்பவ இடத்தில் எழுதப்பட்டது. குற்ற எண் மற்றும் சட்டபிரிவுகள் அடங்கிய விபரங்கள் காவல் நிலையத்தில் வைத்து என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் தயாரித்த ஆவணங்கள் அனைத்திலும் எதிரி கைரேகை உள்ளது. மாதிரிக்கு எடுதத கஞ்சாபொட்டலத்தில் எதிரியின் கையொப்பம் உள்ளது என்றால்சரிதான். சா.பொ.2 ல் உள்ள துண்டுதாளில் எதிரியின் கையொப்பமும், கைரேகையும் இல்லை. சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர்மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை. சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த இடமாகும். நான் சம்பவ இடத்தில் 6.40 மணியில் இருந்து 7.50 மணி வரை இருந்தேன். அப்போது அந்த வழியாக வந்த நபர்களை சாட்சியாக இருக்க அழைத்தேனா என்றால் இல்லை. எதிரியை கைப்பற்றி காவல் நிலையத்திற்கு சென்றபோது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார். விரிவான அறிக்கையை 8.10 மணிக்கு மேல் தயார் செய்து கொடுத்தேன். நான் அந்த அறிக்கையில் எதிரி கைரேகை செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல்

விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் நான் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.